


dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி


NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 293 | 4 Pages | 20.5.2025 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 293 | 4 பக்கங்கள் | 20.5.2025 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு**
**தானஞ்செய் வாரின் தலை**

**விளக்கம்:**

ஒருவன் தன் மனதோடு பொருந்த உண்மை பேசுவானானால் அவன் தவத்தேடு தானமும் ஒருங்கே செய்வாரை விடச் சிறந்தவன்.

## அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடனுக்கு புற்றுநோய் பாதிப்பு



வாஷிங்டன், மே.20


அமெரிக்க முன்னாள்ஜனாதிபதிஜோ பைடன் (வயது 82). இவர் 2021 முதல் 2025வரை அமெரிக்க ஜனாதிபதியாக செயல்பட்டார்.

இந் நிலையில், ஜோ பைடனுக்கு புற்றுநோய் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. புரோஸ்டேட் வகை புற்றுநோயால் பைடன் பாதிக்கப்பட்டுள்ளார்.

மிகவும் வீரியமிக்க இந்த புற்றுநோய் அவரின் எலும்புகளுக்கும் பரவியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வகை புற்றுநோய்க்கு சிகிச்சைகள் உள்ளன ஆனால், இந்த புற்றுநோயை குணப்படுத்த முடியாது என்று தகவல் வெளியாகியுள்ளது. புரோஸ்டேட் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சைக்குபின் அதிகபட்சமாக 4 முதல் 5 ஆண்டுகள் வரை மட்டுமே உயிருடன் இருப்பார்கள் என டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜோ பைடன் புரோஸ்டேட் புற்றுநோயால் பாதிக்கப்பட்டதை அறிந்து மிகுந்த கவலையடைந்தேன் என்று அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தானில் லஷ்கர் பயங்கரவாதி மர்ம நபர்களால் சுட்டுக்கொலை



லாகூர், மே.20

பாகிஸ்தானில் செயல்பட்டு வரும் லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத அமைப்பு இந்தியாவில் பல்வேறு பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டுள்ளது. அந்த அமைப்பை சேர்ந்த பயங்கரவாதிகள் இந்தியாவில் தாக்குதல்களை அரங்கேற்றியுள்ளனர்.

குறிப்பாக 2005ம் ஆண்டு பெங்களூரு தாக்குதல், 2006ம் ஆண்டு நாக்பூர் தாக்குதல், 2008ம் ஆண்டு ராம்பூர் தாக்குதல்களில் மூளையாக செயல்பட்ட லஷ்கர் இ தொய்பா பயங்கரவாதி அபு சைபுல்லா கலீத் நேபாளத்தில் போலி பெயரில் வசித்து வந்தான். இந்த தாக்குதலில் பலர் உயிரிழந்தனர். பாகிஸ்தானை சேர்ந்த கலீத் நேபாளத்தில் வினோத் குமார் என்ற போலி பெயரில் வசித்து வந்தான். அவன் நேபாளத்தைசேர்ந்தநக்மான்பனுஎன்றபெண்ணைதிருமணம்செய்துகொண்டு வாழ்ந்து வந்தான்.

இந்தியாவில் தாக்குதல்களை நடத்திவிட்டு நேபாளத்தில் இருந்து பின்னர் பாகிஸ்தானுக்கு சென்றுவிட்டான். பயங்கரவாதி கலீத் பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் வசித்து வந்தான்.

இந்நிலையில், பயங்கரவாதி கலீத் நேற்று மர்ம நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளான். சிந்து மகாணம் பிடின் மாவட்டம் மத்லி பகுதியில் பயங்கரவாதி கலீத் மர்ம நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளான். மத்லி பகுதியில் உள்ள சாலையில் நடந்து சென்ற கலீதை பைக்கில் வந்த மர்ம நபர்கள் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றுவிட்டு அங்கிருந்து தப்பிச்சென்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## பாகிஸ்தானுக்கு புதிதாக 11 நிபந்தனைகள் விதித்த சர்வதேச நாணய நிதியம்

இஸ்லாமாபாத், மே.20

நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் பாகிஸ்தானுக்கு 700 கோடி டாலர் கடன் வழங்க கடந்த ஆண்டு சர்வதேச நாணய நிதியத்துக்கும் (ஐ.எம்.எப்.), பாகிஸ்தானுக்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது.

பாகிஸ்தானுக்கு முதல் தவணையாக 110 கோடி டாலர் ஏற்கனவே விடுவிக்கப்பட்ட நிலையில், கடந்த வாரம் 2வது தவணையாக 102 கோடி டாலரை (ரூ.8 ஆயிரத்து 670 கோடி) சர்வதேச நாணயம் நிதியம் விடுவித்தது. இந்தியாபாகிஸ்தான் இடையே போர் பதற்றம் உச்சத்தில் இருந்தபோது, இந்தியாவின் எதிர்ப்பையும் மீறி இந்த தொகை விடுவிக்கப்பட்டது.

தற்போது அடுத்த தவணையை விடுவிக்க பாகிஸ்தானுக்கு கூடுதலாக 11 புதிய நிபந்தனைகளை சர்வதேச நாணய நிதியம் விதித்து இருப்பதாக அந்த நாட்டு ஊடகங்களில் தகவல் வெளியாகி இருக்கிறது. இவற்றையும் சேர்த்து மொத்த நிபந்தனைகள் 50 ஆக அதிகரித்து இருக்கிறது. மேலும் இந்தியாவுடனான போர் பதற்றம் இந்த கடன் திட்டத்தில் அபாயத்தை ஏற்படுத்தும் என்றும் எச்சரிக்கை விடுத்து உள்ளது.

## சிங்கப்பூரில் 12 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த இந்தியருக்கு சிறை




சிங்கப்பூர், மே.20

சிங்கப்பூரை சேர்ந்தவர் பரமேந்தர் (வயது 25). இந்தியரான இவர் சிங்கப்பூரில் தங்கியிருந்து அங்குள்ள தனியார் நீச்சல் குளத்தில் பராமரிப்பாளராக இருந்து வருகிறார். இந்தநிலையில் அப்பகுதியை சேர்ந்த 12 வயது சிறுமி ஒருவர் நீச்சல் குளத்திற்கு நீச்சல் கற்று கொள்ள வந்தார்.

அப்போது அந்த சிறுமியுடன் பரமேந்தர் நெருங்கி பழகி வந்துள்ளார். மேலும் அவருக்கு பாலியல் தொல்லை கொடுத்து வந்ததாக கூறப்படுகிறது. சிறுமியின் சமூக வலைத்தள கணக்குகளை பரிமாறி கொண்டு ஆபாசமான குறுந்தகவல்கள் மற்றும் வீடியோக்களை அனுப்பி வந்தார்.

இதுகுறித்து சிறுமியின் பெற்றோருக்கு தெரியவந்தது. இதுகுறித்து சிறுமியின் பெற்றோர் அளித்த புகாரின்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். கோர்ட்டு விசாரணையில் பரமேந்தருக்கு 3 மாதங்கள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

# ரூ. 457 கோடி மதிப்பீட்டில் காவலர் குடியிருப்புகள்; அடிக்கல் நாட்டிய முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை, மே.20

காவல்துறை சார்பில் ரூ. 457 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள காவலர் குடியிருப்புகளுக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

தமிழக தலைமை செயலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், சென்னை மாவட்டம் ஆயிரம் விளக்கு, கோவை மாவட்டம் பொள்ளாச்சியில்ரூ.457கோடியே 14 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள 1,118 காவலர் குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டினார்.




மேலும், கோவை மாட்ட்டம் புறநகர் பகுதி பிளிச்சியில் 211 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள கோவை மத்திய சிறைச்சாலை (பகுதி 1) கட்டிடங்களுக்கும் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

அதேவேளை, முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில், அரசு ஊழியர்களுக்கு ஆயுள் மற்றும் விபத்துக் காப்பீடு உள்ளிட்ட வங்கி சலுகைகளை கட்டணமின்றி வழங்கிட 7 முன்னோடி வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

## இராஜபாளையம் தொகுதியில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம் கட்டப்பட்ட 864 வீடுகள் கொண்ட அடுக்குமாடி குடியிப்பு

இராஜபாளையம் தொகுதியில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம் கட்டப்பட்ட 864 வீடுகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நாளை காணொளி காட்சி மூலம் திறந்து வைக்கவுள்ளார், அதற்கான முன்னேற்பாடு பணிகளை நமது மக்கள் MLA S.தங்கப்பாண்டியன் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார், இந்நிகழ்வில் பேசிய MLA அவர்கள் சாவி கொடுக்கப்படவுள்ள பயனாளிகள் அனைவருக்கும் தகவல் கொடுக்கப்பட்டுள்ளதா என்பதுகுறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார் மேலும் நாளை முதல்கட்டமாக 100 பயனாளிகளுக்கு



வீட்டின் சாவி வழங்கப்படவுள்ளது பின்வரும் அடுத்தடுத்த நாட்களில் அடுத்தடுத்த பயனாளிகளுக்கு வீட்டின் சாவி வழங்கப்படும் எனக் கூறினார், மேலும் நாளை சிறப்பாக அடுக்குமாடி குடியிருப்புதிறப்பு விழா நடைபெற உள்ளது என்பதை இராஜபாளையம் தொகுதி பொதுமக்களுக்கு தெரியப்படுத்தி கொள்கிறோம் எனக் கூறினார்.

இந்நிகழ்வில் குடிசை மாற்று வாரிய உதவிப்பொறியாளர் முருகேஷ்குமார் யூனியன் பொறியாளர் கதிரவன் ஒன்றியகழகநிர்வாகிகள்திருக்குமரன் ஜெயந்தி கலந்துகொண்டனர்.

## கோயம்புத்தூரில் சட்ட விரோதமாக வேலை பார்த்த வெளி மாநிலத்தவர்கள்: 13 பேர் அதிரடி கைது



கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள தனியார் மில் மற்றும் நிறுவனங்களில் தங்கி வேலை செய்யும் வட மாநிலங்களை சேர்ந்தவர்களை கணக்கெடுக்க கமிஷனர் சரவணன் சுந்தர் உத்தரவிட்டிருந்தார். அதன் பேரில் காவல்துறையினர் தீவிரமான கண்காணிப்பில் ஈடுபட்டு வந்தனர். அருகே உள்ள குருடம்பாளையம் அடுத்த தொப்பம்பட்டியில் ஒரு தனியார் நிறுவனத்தில் எந்தவித ஆவணங்களும் இல்லாமல் சட்ட விரோதமான முறையில் வங்காளதேசத்தை சேர்ந்த சொரீப்(32) மற்றும் அவருடைய தம்பி லோதிப் அலி (29) என்பவரும் வேலை பார்த்து வந்துள்ளனர். இதுகுறித்து அவர்களிடம் நடத்திய விசாரணையில் கடந்த 3 வருடமாக சொரீப் வேலை பார்த்து வருவதாகவும், அவரது தம்பி கடந்த ஒரு வருடமாக வேலை பார்ப்பதாகவும் கூறியுள்ளனர். இதனைஅடுத்துகாவல் துறையினர் நடத்திய தீவிர விசாரணையில், நேற்று வீரியம் பாளையம் பகுதியில் உள்ள ஒரு தனியார் மில்லில் ஏராளமான வட மாநிலத்தை சேர்ந்தவர்கள் வேலை பார்த்து வந்தது கண்டு பிடிக்கப்பட்டது. அதிலும் குறிப்பாக மேற்கு வங்காள மாநிலத்தை சேர்ந்த இளைஞர்கள் பலர் வேலை பார்த்து வந்துள்ளனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில் 13 பேருக்கு எந்த வித ஆவணங்களும் இல்லாமல் வேலை பார்த்து வந்துள்ளனர். அதனால் 13 பேரையும் அழைத்து காவல்துறையினர் நடத்திய விசாரணையில் அவர்கள் அனைவருமே வங்காளதேசத்தை சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்தது. அந்த தனியார் மில்லில் வேலை பார்த்து வந்த வங்காளதேசத்தவர்கள், பாப்லு(26), சமீர் (19), அல் அமீன் (24), ஷேஹாக்(26), போனி (30), ரூஷல் (42), முகமது அல்டாப் (45), டைட்டா (24), அரபத் (22), சையோன்(32), ரஷீத்(22) ஆகியோரை கைது செய்து கோயம்புத்தூர் நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர். அதன் பின் அனைவரும் சென்னை புழல் சிறையில் அடைக்கப்பட்டனர்.

## ஒரே பாணியில் கொலைகள்.. பல்லடம் கொலை வழக்கில் தொடர்பு? ஈரோட்டில் பிடிபட்ட 3 பேரிடம் தீவிர விசாரணை



ஈரோடு: ஈரோடு அருகே வயதான தம்பதியர் கொலை செய்யப்பட்டு நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட வழக்கில் 3 பேர் சிக்கியுள்ளனர். பல்லடத்தில் இதே பாணியில் நடந்த கொலையையும் இவர்கள் தான் செய்தார்களா என போலீசார் அவர்களிடம் கிடுக்கிப்பிடி விசாரணை நடத்தி வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஈரோடு மாவட்டம் சிவகிரி அருகே ராமசாமி பாக்கியம்மாள் தம்பதியர் தங்களது தோட்டத்தில் உள்ள வீட்டில் தனியாக வசித்து வந்தனர். இந்நிலையில், கடந்த மாதம் 29, 30 ஆகிய இரண்டு நாட்களாக வீட்டை விட்டு வெளியே வராமல் இருந்துள்ளனர். மேலும், அவரது மகன் செல்போனில் தொடர்பு கொண்டபோதும், எடுக்காததால் சந்தேகமடைந்த மகன், அருகில் உள்ள உறவினர்களிடம் தமது வீட்டுக்கு சென்று பார்க்குமாறு கூறியுள்ளார். அப்போது அந்த தம்பதி ரத்த வெள்ளத்தில் இருந்ததை கண்ட அக்கம் பக்கத்தினர், உடனடியாக சிவகிரி போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். இந்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு வந்த போலீசார் விசாரணை மேற்கொண்டனர். இதில் தம்பதியர் இருவரும் அடித்துக் கொலை செய்யப்பட்டிருப்பதை போலீசார் உறுதி செய்தனர்.

மேலும் பாக்கியம்மாள் கழுத்தில் இருந்து தாலிக் கொடி, தங்க வளையல் கொள்ளையடிக்கப்பட்டிருந்ததையும் போலீசார் கண்டறிந்தனர். இதையடுத்து, இந்த வழக்கு தொடர்பாக விசாரணை செய்ய மாவட்ட எஸ்பி சுஜாதா உத்தரவின்பேரில் ஏடிஎஸ்பி விவேகானந்தன், மேற்கு மண்டல ஐஜி, டிஐஜி, மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் தலைமையில் 15 தனிப்படைகள் அமைக்கப்பட்டன.

இருப்பினும், இந்த கொலை சம்பவத்தில் கைரேகை, செல்போன் டவர், சிசிடிவி காட்சிகள் எதுவும் கிடைக்காத நிலையில், குற்றவாளிகளை பிடிப்பதில் பெரும் பின்னடைவு இருந்து வந்தது. சம்பவம் நடைபெற்ற நாளுக்கு முன்பும், பின்பும் என மூன்று நாட்கள் மாவட்டம் முழுவதும் பொது இடங்களில்பதிவானசிசிடிவிகாட்சிகளைகொண்டு காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டனர்.

இந்த விசாரணையில் சந்தேகத்திற்கு இடமான வகையில் மூன்று பேர் ஒரே இருசக்கர வாகனத்தில் செல்லும் சிசிடிவி காட்சிகளை கைப்பற்றிய போலீசார் இது தொடர்பாக தீவிர விசாரணை நடத்தினர். இந்த விசாரணையில் அவர்கள் அரச்சலூர் பகுதியைச் சேர்ந்த ரமேஷ், மாதேஷ், ஆச்சியப்பன் ஆகியோர் என தெரியவந்தது. இவர்கள் மூவரையும் போலீசார் ரகசிய இடத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

முன்னதாக, பல்லடம் அருகே வயதான தம்பதி மற்றும் அவர்களது மகன் படுகொலை செய்யப்பட்டு நகை, பணம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் பெரும் அதிர்வலையை ஏற்படுத்திய நிலையில், அந்த சம்பவத்திற்கும் இதற்கும் ஏதேனும் தொடர்புள்ளதா? என்ற கோணத்திலும் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள்.

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அடுத்த சேமலைக் கவுண்டம்பாளையம் பகுதியில் தெய்வசிகாமணி என்பவருக்கு சொந்தமான தோட்டத்தில் கடந்தாண்டு நவம்பர் 28ம் தேதி அன்று புகுந்த கும்பல் தெய்வசிகாமணி, அவரது மனைவி அலமேலு அம்மாள், மகன் செந்தில்குமார் என மூன்று பேரை கொடூரமாக அடித்துக் கொலை செய்து வீட்டில் இருந்த 8 பவுன் நகைகளைக் கொள்ளை அடித்துச் சென்றது. இந்தச் சம்பவம் தமிழ்நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்த வழக்கு தொடர்பாக 14 தனிப்படைகள் அமைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்ட நிலையில், எந்த விதமானதடயங்களும் இல்லாமல் போலீஸார் திணறினர். 100 நாட்களைக் கடந்த நிலையில் வழக்கு சிபிசிஐடி போலீஸார் வசம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த வழக்கு தொடர்பாக தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் தான் ஈரோடு மாவட்டத்தில் இதே பாணியில் கொலைச் சம்பவம் நடந்தது. மேலும் கொலை செய்யப்பட்டவர்கள் அடித்துக் கொலை செய்யப்பட்டதும் ஒரே பாணியில் இருந்ததாகக் கூறப்படுகிறது. அரச்சலூர் பகுதியைச் சேர்ந்த மூன்று பேர் தற்போது பிடிபட்ட நிலையில் அவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. இவர்களுக்கு திருப்பூர் சேமலைக்கவுண்டம்பாளையம் பகுதியில் நடைபெற்ற மூவர் கொலையில் தொடர்பிருக்கிறதா என போலீசார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.



தினகனி



## கடன் சுமையால் உயர்கல்வி தடை: மாணவிக்கு உதவிக்கரம் நீட்டிய கமல்ஹாசன்



சென்னை, மே.20

ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த மாணவி சோபனா பிளஸ்2 பொதுத் தேர்வில் 562 மதிப்பெண் பெற்று பள்ளி அளவில் முதலிடம்பிடித்தார். இந்த நிலையில், கடன் சுமை காரணமாக மாணவி சோபான அதே பகுதிகளில் உள்ள ஜவுளி கடையில் வேலை செய்து வருவதாக சமூகவலைதளங்களில் தகவல் பரவியது.

இந்த நிலையில், மாணவியின் கதையை சமூக வலைதளம் மூலம் அறிந்த மக்கள்நீதி மய்யம் தலைவர் கமல் ஹாசன், மாணவி சோபனாவை சென்னைக்கு வரவழைத்தார். அங்கு, கமல் பண்பாட்டு மையத்தின்சார்பாக மாணவி உயர் கல்வி தொடரவும், அவர் சிவில் சர்வீசஸ் தேர்வுகளுக்கு தயாராவதற்கான தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் ஏற்பாடு செய்தார்.

## சென்னை: சுவர்களுக்கு இடையே சிக்கிய மூதாட்டி தீயணைப்பு வீரர்கள் 3 மணி நேரம் போராடி மீட்டனர்



சென்னை மே.20

சென்னை மணலி காமராஜர் தெருவைச் சேர்ந்தவர் பொம்மி (60 வயது). இன்னும் திருமணம் ஆகாத இவர், உறவினருடன் வாழ்ந்து வருகிறார். இவரது உறவினர்கள் அனைவரும் திருப்பதி கோவிலுக்கு சென்று இருந்தனர். வீட்டில் பொம்மி மட்டும் தனியாக இருந்தார்.


இந்த நிலையில் வீடு துடைக்க பயன்படுத்தப்படும் 'மாப்', மொட்டை மாடியில் இருந்து இவரது வீட்டுக்கும், அருகில் உள்ள மற்றொரு வீட்டுக்கும் இடையே உள்ள சுமார் அரைஅடி சந்தில் விழுந்து விட்டது. அதை எடுப்பதற்காக அந்த சந்துக்குள் சென்ற பொம்மி, 2 வீடுகளின் சுவருக்கு இடையே சிக்கிக்கொண்டார்.

நீண்டநேரம் முயற்சி செய்தும் அவரால் வெளியே வரமுடியாததால் பயத்தில் கூச்சலிட்டார்.

அவரது அலறல் சத்தம் கேட்டு ஓடிவந்த அக்கம் பக்கத்தினர், பொம்மியை காப்பாற்றி வெளியே எடுக்க முயற்சித்தனர். ஆனால் அவர்களால் முடியவில்லை. இதுபற்றி தகவல் அறிந்ததும் திருவொற்றியூர் மண்டல குழு தலைவர் ஏ.வி.ஆறுமுகம், மணலி போலீசார் மற்றும் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர்.

தீயணைப்பு வீரர்கள் சுமார் 3 மணி நேரம் போராடி, 2 வீடுகளின் சுவருக்கு இடையே சிக்கி தவித்த பொம்மியை பத்திரமாக மீட்டனர். இதில் அவருக்கு முகம், முதுகு போன்ற இடங்களில் சிராய்ப்பு ஏற்பட்டது. இதையடுத்து பொம்மியை அருகில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

## பெண் குழந்தையை ரூ.2 லட்சத்துக்கு விற்ற டாக்டர் மீது குண்டர் சட்டம் பாய்ந்தது



கடலூர், மே.20

கடலூர் மாவட்டம் சிதம்பரம் காமராஜர் நகரை சேர்ந்த ஒரு தம்பதிக்கு திருமணமாகி 15 ஆண்டுகள் ஆகிறது. ஆனால் அந்த தம்பதிக்கு குழந்தை இல்லை. இதற்கிடையே அந்த தம்பதியினர் கடந்த ஏப்ரல் மாதம் ஒரு பச்சிளம் குழந்தையை வீட்டில் வளர்த்து வந்ததை பார்த்த அப்பகுதியை சேர்ந்த ஒருவர், கடலூர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலருக்கு தகவல் தெரிவித்தார்.

அதன்பேரில் அதிகாரிகள், அந்த தம்பதியிடம் விசாரணை நடத்தியதில் பிறந்து 5 நாட்களே ஆன பெண் குழந்தையை வடலூரை சேர்ந்த சித்தா டாக்டரான சத்யபிரியா (67) என்பவரிடம் இருந்து ரூ.2 லட்சம் பணம் கொடுத்து வாங்கி வந்து வளர்ப்பதும், சத்யபிரியா சட்டவிரோதமாக கருக்கலைப்பு மையம் நடத்தி வந்ததும், தவறான முறையில் மற்றும் திருமணம் ஆகாமல் கருவுற்ற பெண்களுக்கு பிரசவம் பார்த்து குழந்தை இல்லாத நபர்களுக்கு குழந்தையை விற்பனை செய்ததும் தெரியவந்தது.

இதையடுத்து குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்கள் அளித்த புகாரின் பேரில் சிதம்பரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து சத்யபிரியாவை கைது செய்தனர். இந்த நிலையில் சத்யபிரியாவின் குற்ற செயலை கட்டுப்படுத்தும் வகையில் அவரை குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்ய நடவடிக்கை எடுக்கும்படி போலீஸ் சூப்பிரண்டு ஜெயக்குமார், கலெக்டருக்கு பரிந்துரை செய்தார்.

அதன்பேரில் கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் குண்டர் சட்டத்தில் கைது செய்ய உத்தரவிட்டார். இதையடுத்து வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த சத்யபிரியாவிடம், அவரை குண்டர் சட்டத்தில் கைது செய்ததற்கான உத்தரவு நகல் சிறை அலுவலர்கள் மூலம் வழங்கப்பட்டது.

## மீண்டும் மின் கட்டணத்தை உயர்த்தும் முடிவினை கைவிட வேண்டும்: ஓ.பி.எஸ்.


சென்னை, மே.20

தமிழ்நாடு முன்னாள் முதல்அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

மாதம் ஒரு முறை மின் கட்டணம் என்று வாக்குறுதி அளித்துவிட்டு, ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு ஆண்டுதோறும் மின் கட்டணத்தை உயர்த்துவதை தி.மு.க. அரசு வாடிக்கையாகக் கொண்டிருக்கிறது. "சொன்னதைச் செய்வோம்" என்று அறிவித்துவிட்டு சொன்னதற்கு முரணாக தி.மு.க. அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தி.மு.க. அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, 2022ம் ஆண்டு வீடுகள், குறு சிறு தொழில் நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகள், ரெயில்வே மற்றும் கல்வி நிறுவனங்கள் என அனைத்திற்குமான மின் கட்டணத்தை இரண்டு மடங்குக்கும் மேலாக உயர்த்தியது. இதர மின் சேவைக் கட்டணங்களும் பன்மடங்கு உயர்த்தப்பட்டன. தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் மின் கட்டணம் வாயிலாக ஆண்டுக்கு ஆறாயிரம் ரூபாய் மிச்சப்படுத்தப்படும் என்று அறிவித்துவிட்டு, ஆறாயிரம் ரூபாய்க்கும் மேலாக கூடுதல் மின் கட்டணத்தை உயர்த்தி பொதுமக்கள் வயிற்றில் அடித்த அரசு தி.மு.க. அரசு. இதனைத் தொடர்ந்து ஆண்டுக்காண்டு மின்கட்டணத்தை உயர்த்துவதை வாடிக்கையாக கொண்டுள்ள தி.மு.க. அரசு, தற்போது மீண்டும் மின் கட்டணத்தை உயர்த்த உத்தேசித்துள்ளதாக தகவல்கள் வந்துள்ளன.

அந்த வகையில், அண்மையில் வெளியிடப்பட்ட நுகர்வோர் விலைக் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, வீடுகளுக்கான மின் கட்டணம் உட்பட அனைத்து மின் கட்டணங்களும் மற்றும் நிலையான கட்டணங்களை இந்த ஆண்டு ஜூலை ஒன்றாம் தேதி முதல் உயர்த்த தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் முடிவு செய்திருப்பதாகவும், இதன்படி, குறைந்தபட்சம் 3.16 சதவீதம் கட்டண உயர்வு இருக்கும் என்றும் செய்திகள் வந்துள்ளன. ஆண்டுக்காண்டு மின் கட்டணம், சொத்து வரி, குடிநீர் வரி ஆகியவற்றை உயர்த்துவது ஏழையெளிய மக்களை வாட்டி வதைக்கும் செயல். இது கடும் கண்டனத்திற்குரியது. இதன் காரணமாக வாடகைக்கு குடியிருக்கும் ஏழையெளிய மக்கள் கூடுதல் நிதிச் சுமைக்கு ஆளாக்கப்படுவார்கள். மேலும், விலைவாசி உயர்வுக்கு வழிவகுக்கும். முதல்அமைச்சர் இதில் உடனடியாகத் தலையிட்டு, வருகின்ற ஜூலை ஒன்றாம் தேதி முதல் உயர்த்த உத்தேசித்துள்ள கட்டண உயர்விற்கு அனுமதி மறுக்கவும், மக்கள் மீது சுமத்த உத்தேசித்துள்ள கூடுதல் நிதிச் சுமையை அரசே ஏற்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## சாத்தான்குளம் விபத்து எதிரொலி: தடுப்புச்சுவர் இல்லாத கிணறுகளை கணக்கெடுக்க தலைமை செயலாளர் உத்தரவு



சென்னை, மே.20

சாத்தான்குளம் அருகே சாலையோரம் இருந்த கிணற்றுக்குள் கார் கட்டுப்பாட்டை இழந்து பாய்ந்ததில் 5 பேர் பலியானார்கள். இந்த சம்பவம் தமிழகம் முழுவதும் அனைத்து தரப்பினரையும் நெஞ்சுருக வைத்துள்ளது. இதையடுத்து சாலை ஓரங்களில் தடுப்புச்சுவர் இல்லாத கிணறுகளை ஆய்வு செய்ய தலைமைச் செயலாளர் முருகானந்தம் உத்தரவிட்டுள்ளார்.


இது தொடர்பாக அனைத்து மாவட்ட கலெக்டர்கள், நெடுஞ்சாலைதுறைக்குதலைமை செயலாளர் முருகானந்தம் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.

அதில் அவர், தமிழகம் முழுவதும் உள்ள நெடுஞ்சாலை மற்றும் சாலை ஓரங்களில் தடுப்புச்சுவர் இல்லாத கிணறுகள், பெரும் பள்ளங்களை ஆய்வு செய்து கணக்கெடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார். மேலும் அவர், சாலையின் ஓரத்தில் பள்ளங்களோ, கிணறுகளோ இருப்பது தெரியவந்தால் அதனை மூட வேண்டும் என்றும், அது தொடர்பாக வாகன ஓட்டிகளுக்கு தெரியும் வகையில் பலகைகள் வைக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தி உள்ளார்.

அந்த பலகைகளில், இந்த பகுதிகளில் பள்ளம் அல்லது கிணறு இருக்கிறது என்று எழுதி விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். பள்ளங்கள், கிணறுகள் குறித்து முழுமையான ஆய்வு செய்த பிறகு, கிணறுகளை பாதுகாப்பாக மூடுவது குறித்து பரிசீலிக்க வேண்டும். கிணற்றை சுற்றி பெரிய அளவில் தடுப்புச்சுவரை ஏற்படுத்த வேண்டும். இல்லையென்றால், கிணறு இருக்கும் இடத்தில் சாலை ஓரத்தில் தடுப்புவேலிகள்அமைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி இருக்கிறார்.

பெரும்ஆபத்தைவிளைவிக்கும் வகையில் சாலையோர கிணறுகள் இருக்கும்பட்சத்தில் அவற்றை நிரந்தரமாக மூடுவதற்கு தகுந்த நடவடிக்கைகளை மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து நெடுஞ்சாலைத்துறையினர் ஈடுபட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## ஒட்டுமொத்தமான வளர்ச்சியில் இந்தியாவில் தமிழ்நாடு சிறந்த மாநிலம்: அரசு பெருமிதம்



சென்னை, மே.20

தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சிப் பொறுப்பேற்ற முதலாண்டிலேயே திராவிட மாடல் அரசு வேளாண்மைக்குத் தனி முக்கியத்துவம் அளிக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் வரலாற்றில் முதல் முறையாக வேளாண்மைத்துறைக்கு தனி நிதிநிலை அறிக்கையை சட்டசபையில் அளித்திட செய்தார்.

தொடர்ந்து 5 வேளாண் நிதிநிலை அறிக்கைகள் அளிக்கப்பட்டு மொத்தம் ரூ.1,94076 கோடி நிதி ஒதுக்கீட்டில் வேளாண் உற்பத்தி பெருக உழவர் பெருங்குடி மக்கள் நலம் பெறப் புதிய பல திட்டங்களை அறிமுகப்படுத்திச் செயல்படுத்தி வருகிறார். முந்தைய ஆட்சிக்காலத்தில் 10 ஆண்டுகளில் 2012 2013 முதல் 20202021 வரை சராசரியாக 1.36 சதவீதமாக இருந்த வேளாண் வளர்ச்சி, 2021 முதல் 2024 வரை சராசரியாக 5.66 சதவீதமாக உயர்ந்து சாதனை படைத்தது.

திராவிட மாடல் அரசின் வேளாண் வளர்ச்சித் திட்டங்களால் கேழ்வரகு, கொய்யா உற்பத்தித்திறனில் இந்தியாவில் தமிழ்நாடு முதலிடம். மக்காச்சோளம், கரும்பு, புளி, மரவள்ளிக் கிழங்கு, மல்லிகை, எண்ணெய் வித்துகள் உற்பத்தித்திறனில் இந்தியாவில் தமிழ்நாடு இரண்டாம் இடம். வேர்க்கடலை, தென்னை உற்பத்தித்திறனில் இந்தியாவில் தமிழ்நாடு மூன்றாம் இடம் என்று சாதனைகள் படைத்துள்ளது திராவிட மாடல் அரசு.

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சிப் பொறுப்பேற்ற சில நாள்களில் வேளாண் சாகுபடி நிலப்பரப்பு அதிகரிக்கப்படும் என அறிவித்தார். அந்த அறிவிப்பின் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட திட்டங்களால் 20202021ல் இருந்த பாசனம் பெற்ற நிலப்பரப்பு 36.07 லட்சம் எக்டர் என்பது, 20232024ல் 38.33 லட்சம் எக்டர் என அதிகரித்து உணவுப்பொருள் உற்பத்தியில் சாதனைகள் நிகழ்ந்தன.

வேளாண்மைக்கு உயிர்நாடிகளான ஆறுகள், வாய்க்கால்களில் தூர்வாரும் பணிகள் முறையாக உரிய நேரத்தில் நிறைவேறினால்தான் கடைக்கோடிப் பகுதிகளின் பாசனத்திற்கும் தண்ணீர் உரிய நேரத்தில் கிடைக்கக்கூடும். என வேதான் தூர்வாரும் பணிகளுக்கு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னுரிமை அளித்தார்.

அதன்படி 5,427 கி.மீ. நீளத்திற்கு சி,டி பிரிவு வாய்க்கால்கள் தூர்வாரப்பட்டு 2 லட்சத்து 10 ஆயிரம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மேலும் 8,540 சிறுபாசனக் குளங்கள் தூர்வாரப்பட்டு, 2,382 புதிய பண்ணைக் குட்டைகளும், 2,474 ஆழ்துளை / குழாய்க் கிணறுகளும் ஏற்படுத்தப்பட்டன.

கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்:

இத்திட்டத்தில் 10,187 கிராம ஊராட்சிகளில், ரூ.786.86 கோடியில் 47,286 ஏக்கர் தரிசு நிலங்கள் மீள சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டன. 51.13 லட்சம் பயனாளிகள். 213 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் தேசிய வேளாண் சந்தை (e NAM) தளத்துடன் இணைக்கப்பட்டு, ரூ.6,636 கோடி மதிப்பிலான 22.71 லட்சம் மெ.டன் விளைபொருள் வர்த்தகம் நடைபெற்று 19 லட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

வேளாண்துறை இயந்திரமயமாக்குதல் திட்டப்படி ரூ 499.45 கோடியில் 62,820 விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்களும், கருவிகளும் மானியங்களுடன் வழங்கப்பட்டுள்ளன. ரூ.96.56 கோடி மதிப்புடைய 1205 வேளாண் இயந்திர வாடகை மையங்கள் ஏற்படுத்தப்பட்டுச் சிறு விவசாயிகளுக்குக் குறைந்த வாடகையில் வேளாண் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. 1,652 புதிய வேளாண் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு இவாடகை சேவை மையங்கள் மூலம் 69,000 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் 2021ல் ஆட்சிப் பொறுப்பேற்ற பின் பாசன வசதிகளை மேம்படுத்திட வேண்டுமென உத்தரவிட்டார். அதன்படி 27 மாவட்டங்களில் 917 ஏரிகள் ரூ1212 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டன. சிறுசிறு விவசாயிகளும் பயன்பெற்று வேளாண் உற்பத்திகளைப் பெருக்கிட 814 சிறுபாசன ஏரிகள் ரூ75.59 கோடி செலவில் சீரமைக்கப்பட்டு விவசாய வளர்ச்சிக்கு உதவிகள் செய்யப்பட்டுள்ளன. தடுப்பணைகள் ஆறுகளின் குறுக்கே அமைக்கப்படுவதன் மூலம் அந்தந்தப் பகுதிகளில் பாசனப் பணிகள் சிறப்படையும், இந்த நோக்கத்தில் 24 மாவட்டங்களில் 88 தடுப்பணைகள் ரூ519 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு நிலத்தடி நீர் பராமரிக்கப்படவும் அவை உதவுகின்றன.

பால் ஒரு முக்கியமான சரிவிகித உணவு எனக் கூறப்படும். உழவர்களின் துணைத் தொழிலாக விளங்கும் கால்நடை வளர்ப்பின் மூலம் தமிழ்நாட்டில் பால் உற்பத்தியைப் பெருக்குவதிலும் திராவிட மாடல் அரசு சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. அதன் பயனாக முந்தைய ஆட்சிக் காலத்தில் ஓராண்டில் அதாவது, 201819ல் 8,362 மெட்ரிக் டன் பால் உற்பத்தி செய்யப்பட்டிருந்த நிலையில், திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்களால் 2023 2024ம் ஆண்டில் பால் உற்பத்தி, 10,808 மெட்ரிக் டன் என அதிகரித்துச் சாதனை படைத்துள்ளது.

முட்டை சத்துள்ள நல்ல உணவு. நம் தமிழ்நாட்டுக் குழந்தைகளுக்கு முட்டை உணவு கிடைத்திட வேண்டும் என்பதால்தான் முத்தமிழறிஞர் கலைஞர் சத்துணவுத் திட்டத்தில் வாரம் 5 நாள்களும் 5 முட்டைகளை குழந்தைகளுக்குப் பள்ளிகளில் வழங்கிட ஆணையிட்டு வழங்கினார். தேவைக்கேற்ப முட்டைகள் தாராளமாகக் கிடைத்திட வேண்டும் அல்லவா அதனால் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினின் அரசு கோழிப் பண்ணைகளுக்கு அளித்துவரும் ஊக்கத்தின் பயனாக முந்தைய ஆட்சியில் 20182019ல் உற்பத்தியான 1884.22 கோடி முட்டைகளை விட 20232024ம் ஆண்டில் 2233.25 கோடி முட்டைகள், ஏறத்தாழ 350 கோடி முட்டைகள் கூடுதலாக உற்பத்தியாயின.

தமிழ்நாட்டு மீனவர்கள் கடுமையாக உழைத்து கடல் நடுவே சென்று மீன் பிடித்து வந்து மக்களுக்கு வழங்குகிறார்கள். மீனவர் பெருங்குடி மக்களுக்கு உதவிடும் நோக்கில் திராவிட மாடல் அரசு ரூ.1,428 கோடி மதிப்பில் 72 மீன் இறங்கு தளங்களைப் புதிதாக ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் மீன்பிடித் தொழில் சிறக்க தரங்கம்பாடி, இராமேஸ்வரம், திருவொற்றியூர் குப்பம் ஆகிய பகுதிகளில் மீன்பிடித்தொழில்கள் சிறக்கவும் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் பல திட்டங்களை நிறைவேற்றியுள்ளார்.

இப்படி, வேளாண்மை, கால்நடைகள் வளர்ப்பு, மீனவர் நலன் என ஒவ்வொரு துறையையும், தாய் தன் குழந்தைகளைப் பேணி வருதல்போல் வளர்த்துள்ளதால், தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் சிறந்து ஒட்டுமொத்தமான வளர்ச்சியில் இந்தியாவில் தமிழ்நாடு சிறந்த மாநிலம் எனும் பாராட்டுகளையும் புகழையும் குவித்து வருகிறது. என்றும், எதிலும் தமிழ்நாடு முதலிடமே எனும் முழக்கம் எங்கும் எதிரொலிக்கிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## திருத்துறைப்பூண்டியில் தமிழ்ச்சங்கம் தொடக்க விழா திரைப்படப் பாடலாசிரியர் கவிஞர் யுகபாரதி பங்கேற்பு




திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி காமாட்சி திருமண அரங்கத்தில் திருத்துறைப்பூண்டி தமிழ் சங்கம் தொடக்க விழா எடையூர் மணிமாறன் தலைமையில் நடைபெற்றது. அன்பு.யோகராஜன் வரவேற்புரையாற்றினார். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜி.பழனிச்சாமி, சட்டமன்ற உறுப்பினர் க. மாரிமுத்து, முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் அ. பாஸ்கர், குழந்தைகள் நல மருத்துவர் தா.ராஜா, வழக்கறிஞர்கள் சங்க தலைவர் ஆர்.பி. அருள் செல்வன், மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆலோசனைக் குழு உறுப்பினர் ஆர்.எஸ். ஆர். செல்வ கணபதி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திரைப்பட பாடலாசிரியர் கவிஞர் யுகபாரதி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் வழக்கறிஞர் கதாக. அரசு தாயுமானவன், முத்தமிழ் பண்பாட்டு பாசறை தலைவர் ஆரூர் சீனிவாசன், நாகை தமிழ் சங்கத் தலைவர் ஆவராணி ஆனந்தன், திருக்குவளை வாசகர் வட்டம் கவிஞர் செந்தூர் குமார், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் மாவட்ட செயலாளர் தென்னடார் அம்பிகாபதி, திருவாரூர் தமிழ் இயக்கம் பாவலர் கோமல் தமிழ் அமுதன், திரைப்பட வசனம் விடுதலை 2 கவிஞர் தை. கந்தசாமி, கவிஞர் நிலாதரன், ராய் டிரஸ்ட் இன்டர்நேஷனல் நிறுவனத் தலைவர் முனைவர் துரை ராயப்பன், பாலம் தொண்டு நிறுவனர் செந்தில்குமார், கீழை.கதிர்வேல், லெனின் பாபு, சித்த மருத்துவர் இரவி, ஆதிரங்கம் வீரசேகர், தகவல் தொழில்நுட்ப தலைவர் கமல், பொன்இளையகுமார், இக்பால் ராஜா, மைக்கேல் ராஜ், எழுத்தாளர் கமலா கந்தசாமி, பிரைட் பீப்புள் பிரபாகரன், ஆசிரியர் மாடர்ன் பள்ளி முருகானந்தம், மணலி அப்துல் காதர், ராம் பிரகாஷ், நிருபர் பி.ஜாகிர் உசேன், மாலை முரசு நிருபர் பள்ளங்கோயில் வி.பி.பிரபாகரன், அமைப்பு செயலாளர் வெ. செந்தில், பறவைகளின் பாதுகாவலர் வேதமணி, பேராசிரியர் நடேச மகரந்தன் உள்ளிட்ட ஏராளமான சமூக ஆர்வலர்கள் தமிழ் இயக்க சான்றோர்கள் மாணவ மாணவிகள், சமூக ஆர்வலர்கள், சமூக சிந்தனையாளர்கள், தமிழ் மொழி பற்றாளர்கள் , தமிழாசிரியர்கள், பத்திரிக்கையாளர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சியில், தொல்காப்பியா மணிமாறன் தமிழர்களின் வீரம் பண்பாடு வரவேற்பு பரதநாட்டியம் நிகழ்த்தினார். இறுதியில் தமிழக அரசின் திறனறிவு தேர்வில் வெற்றிப்பெற்ற 21 மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. கவிஞர் யுகபாரதிக்கு மருதநில கவிஞர் என்ற விருது வழங்கப்பட்டது. வாழ்வில் சாதனை புரிந்த சமூகம் சார்ந்த தமிழ் பற்றாளர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி யுகபாரதி சிறப்பு செய்தார். இந்த நேரத்தில் ஏன் தமிழ் சங்கங்கள் தேவை என்ற நோக்கில் கலந்துக்கொண்ட அனைவரும் வாழ்த்துரை வழங்கினர். கீழதஞ்சை மாவட்டத்தில் பிறந்து பல்வேறு துறையில் சிறந்து விளங்கிய, தமிழகத்தில் வாழ்ந்து மறைந்தும், வாழ்ந்து கொண்டுள்ள 100க்கும் மேற்பட்டவர்களின் சுயவிபர படம் வெளியிடப்பட்டது. இலக்கியத்தில் உள்ள பெரிய விடயங்களை ஒற்றைச் சொல்லில் கவிஞர்கள் எப்படி கொண்டு வந்தார்கள் என்றும், சினிமாப் பாடல்களின் கவிஞர்கள் எப்படியெல்லாம் தமிழை வளர்த்தார்கள் என்ற நோக்கில் கவிஞர் யுகபாரதி சிறப்புரையாற்றினார். அனைவருக்கும் இறுதியில் இரவு விருந்து வழங்கப்பட்டது. நிகழ்ச்சியை தமிழாசிரியர் ஜெகதீஸ்வரன் தொகுத்து வழங்கினார். தமிழ்ச் சங்க செயலாளர் நல் நூலகர் ஆசைத்தம்பி நன்றி கூறினார்.

# வேன் பாய்ந்து 5 பேர் பலியான சம்பவம் கிணற்றில் இருந்து 37 சவரன் நகை மீட்பு: உடல்கள் உறவினர்களிடம் ஒப்படைப்பு

நெல்லை: கிணற்றில் வேன் பாய்ந்து பலியான 5 பேரின் உடல்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப் பட்டது. கிணற்றில் இருந்து 37 சவரன் நகை மீட்கப்பட்டது. கோவை சங்கிலியம்பாளையம் பகுதியைச் சேர்ந்த தேவநாதன் மகன் மோசஸ் (50), அவரது மனைவி வசந்தா (49), மகன் கெர்சோம், அவரது மனைவி சைனி கிருபா, ஒன்றரை வயது குழந்தை ஸ்டாலின், உறவினர்கள் துடியலூரைச் சேர்ந்த ரவி கோயில்பிச்சை (60), அவரது மனைவி ஹெச்சியா (49), மகள் ஜெரின் எஸ்தர்(23) ஆகிய 8 பேர் நேற்று முன்தினம் காரில் தூத்துக்குடி மாவட்டம் உடன்குடி அருகேயுள்ள வெள்ளாளன்விளையில் உள்ள ஆலய பிரதிஷ்டை விழாவில் பங்கேற்பதற்காக வந்தனர்.



காரை மோசஸ் ஓட்டி வந்தார். சாத்தான்குளம் அருகே மீரான்குளம் பகுதியில் வரும்போது முன் பக்க டயர் வெடித்ததால் கார் கட்டுப்பாட்டை இழந்து அதே பகுதியில் உள்ள தரைமட்ட கிணற்றுக்குள் பாய்ந்தது. இதில் மோசஸ் உள்ளிட்ட 5 பேர் உயிரிழந்தனர். மோசஸ் மகன் கெர்சோம், சைனி கிருபா, ஜெரின் எஸ்தர் ஆகிய மூன்று பேர் மீட்கப் பட்டனர்.

இவர்களது உடல் நேற்று நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு வரப் பட்டது. அங்கு உடற்கூறு ஆய்வு செய்யப்பட்ட பின்னர் உறவினர்களிடம் ஒப் படைக்கப்பட்டது. அப்போது தூத்துக்குடி கனிமொழி எம்பி, நெல்லை மாவட்ட கலெக்டர் சுகுமார், மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன் உள்ளிட்டோர் உயிரிழந்தவர்களின் உடல்களுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினர்.

இந்நிலையில் விபத்தின் போது அவர்கள் காரில் ஒரு பையில் வைத்திருந்த 37 சவரன் நகை தண்ணீரில் மூழ்கியதாக மீட்பு பணியில் ஈடுபட்டவர்களிடம் பாதிக்கப் பட்ட குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். இதன் பேரில் தீயணைப்பு வீரர்கள், கிணற்றில் இருந்த தண்ணீரை வெளியேற்றி சகதியில் இருந்த 2 ஹேண்ட்பேக்குகளை மீட்டனர். அதில் 37 சவரன் நகை மற்றும் ரூ.7600 இருந்தது. அதை அவர்கள உறவினர்களிடம் ஒப்படைத்தனர்.

# ஜூலை 7ல் கும்பாபிஷேகம்; திருச்செந்தூர் கோயிலில் யாகசாலை முகூர்த்த கால் நடும் விழா

திருச்செந்தூர், மே.20

தமிழ்க்கடவுள் முருகனின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் கோயிலில் ஜூலை 7ம்தேதி மகா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. கும்பாபிஷேகத்துக்கான யாகசாலை பூஜைகள் வருகின்ற ஜூலை 1ம்தேதி தொடங்கி நடைபெற உள்ளது. முதற்கட்டமாக நேற்று காலை சண்முகருக்கு யாகசாலைகள் அமைப்பதற்காக பூமி பூஜை, முகூர்த்தக் கால்



நடும் விழா நடந்தது. இதனை முன்னிட்டு அதிகாலை 4 மணிக்கு கோயில் நடை திறக்கப்பட்டு, 4.30 மணிக்கு விஸ்வரூபம், 5 மணிக்கு உதயமார்த்தாண்ட அபிஷேகமும், தொடர்ந்து மற்ற கால பூஜைகள் நடந்தது.

ராஜகோபுரம் மேலவாசல் அருகே யாகசாலை அமைக்கப்பட உள்ள இடத்தில் பூஜை செய்யப் பட்ட முகூர்த்தக் கால் நடப்பட்டது.

இதில், அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், கலெக்டர் இளம்பகவத், கோயில் தக்கார் அருள்முருகன், இணை ஆணையர் ஞானசேகரன் உள்ளிட்டோர் முகூர்த்தக் கால் நட்டனர்.

# தஞ்சாவூர் அருகே நாட்டு வெடி தயாரிக்கும்போது பட்டாசு ஆலை வெடித்து 2 பேர் பலி: உரிமையாளர் கைது

ஒரத்தநாடு, மே.20

தஞ்சாவூர் அருகே நாட்டு வெடி தயாரிக்கும் போது பட்டாசு ஆலை வெடித்து சிதறிய விபத்தில் 2 பேர் பலியானார்கள். பட்டாசு ஆலை நடத்திய பெண் உரிமையாளர் கைது செய்யப்பட்டார். தஞ்சாவூர் மாவட்டம் நெய்வேலி தென்பாதி கிராமத்தை சேர்ந்த சர்புதீன் என்பவர் விழாக்களில் பயன்படுத்தப்படும் வெடிகளை வாங்கி விற்பனை செய்து வந்தார். பிறகு அவரது மகன் அப்பாஸ் என்பவர் நாட்டு வெடி தயாரிப்பில் ஈடுபட்டார். தற்போது அப்பாஸ் வெளிநாட்டில் உள்ளார். இவரது சகோதரி சமரத் பீவி (47).

இவரது மகன் முகமது ரியாஸ் (19) ஆகியோர் நெய்வேலி தென்பகுதியில் அண்ணாதுரை என்பவருக்கு சொந்தமான இடத்தில், பட்டாசு ஆலை



வைத்து நடத்தி வந்தனர். இதில் பட்டாசு மட்டுமின்றி சணல் கொண்டு செய்யப்படும் நாட்டு வெடியை மறைமுகமாக தயாரித்து கோயில் திருவிழாக்கள், திருமணம் மற்றும் இறப்பு நிகழ்ச்சிக்கு விற்பனை செய்து வந்துள்ளனர். இந்நிலையில் நேற்று காலை வழக்கம் போல, முகமது ரியாஸ், அங்கு பணியாற்றும் சுந்தரராஜன் (60) உள்ளிட்ட 5 பேர் நாட்டு வெடி தயாரிப்பில் ஈடுப்பட்டிருந்தனர். அப்போது சாப்பிட்டுவதற்காக முகமது ரியாஸ், சுந்தரராஜன் தவிர மற்ற 3 பேரும் வெளியில் சென்று விட்டனர். முகமது ரியாஸ், சுந்தரராஜன் ஆகியோர் வெடி தயாரித்து கொண்டிருந்தனர். அப்போது எதிர்பாராத விதமாக நாட்டு வெடி வெடித்து சிதறியது. இதில் கட்டிடம் இடிந்து விழுந்து முகமது ரியாஸ், சுந்தரராஜன் ஆகியோர் சம்பவ இடத்திலேயே பலியானார்கள்.

விபத்துகுறித்துவி.ஏ.ஓ., பழனிவேல் புகாரின் பேரில், வாட்டாடத்திக் கோட்டை போலீசார் உரிமையாளர் சமரத்பீவி மீது வழக்கு பதிவு செய்து கைது செய்தனர். மேலும், நாட்டு வெடி தயாரிக்க இடம் வாடகைக்கு கொடுத்த உரிமையாளர் அண்ணாதுரையை போலீசார் தேடி வருகின்றனர். விபத்து குறித்து கலெக்டர் பிரியங்கா பங்கஜம் கூறுகையில், 'அனுமதியின்றி நாட்டு வெடிகள் தயார் செய்ததாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. வருவாய்த் துறை, போலீசார் மூலம் உரிய முறையில் விசாரிக்கப்பட்டு வருகிறது. மாவட்ட முழுவதும் பட்டாசு குடோன்கள் கண்காணிக்கப்படும். இடத்தின் உரிமையாளர் மீது விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார்.

# ராணுவ வீரர் துப்பாக்கிச்சூடு: 2 பேர் படுகாயம்

திருமங்கலம், மே.20

மதுரை மாவட்டம், திருமங்கலம் அருகே பாறைக்குளம் கிராமத்தை சேர்ந்த முத்து மகன்கள் மருதுபாண்டி (45), உதயகுமார் (40), மணிகண்டன் (35). மூவரும் கூலி தொழிலாளர்கள். முத்துவின் தம்பி கருணாநிதியின் மகன் மாரிச்சாமி (40). இவர் எல்லை பாதுகாப்புப்படையில் பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்றவர். இவர்களது வீடு அருகருகே உள்ளது. மாரிச்சாமி – மருதுபாண்டி தரப்புக்கும் இடையே சொத்து தகராறு மற்றும் இடப்பிரச்னை காரணமாக முன்விரோதம் இருந்தது. இந்நிலையில், நேற்று காலை மணிகண்டன், அவரது மனைவி மல்லிகா தேவி இடையே குடும்ப தகராறு, வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது அங்கு வந்த மாரிச்சாமி, தன்னை திட்டுவதாக கருதி மணிகண்டனிடம் தகராறு செய்தார். தகராறை விலக்க மருதுபாண்டி, உதயகுமார் ஆகியோர் அங்கு வந்தனர்.

சகோதரர்கள் மூவரும்



சேர்ந்து தன்னை தாக்கி விடுவார்களோ என்ற அச்சத்தில் வீட்டுக்குள் சென்ற மாரிச்சாமி அங்கிருந்து துப்பாக்கியை எடுத்து வந்து.

தனது அண்ணன் மகன்கள் மூவரையும் நோக்கி 5 ரவுண்டுகள் துப்பாக்கியால் சுட்டார். இதில் இரண்டு குண்டுகள் உதயகுமாரின் விலா பகுதியில் பாய்ந்ததில் அவர் மயங்கி விழுந்தார். ஒரு குண்டு அருகே கடையில் இருந்த கவியரசு என்பவரது மகன் கிஷோரின் (10) வலது கை தோள் பட்டையில் பாய்ந்தது. படுகாயமடைந்த இருவருக்கும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதுதொடர்பாக மாரிச்சாமியிடம் போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# கொடைக்கானலில் 24ந்தேதி மலர் கண்காட்சி தொடக்கம்

திண்டுக்கல், மே.20

மலைகளின் இளவரசியான கொடைக்கானலுக்கு தமிழகம் மட்டுமின்றி வெளிமாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகின்றனர். வருடம் முழுவதும் இதமான சீதோஷ்ணம் நிலவி வந்தாலும் கோடை சீசன் மற்றும் ஆப் சீசனில் சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்து காணப்படுகிறது. கோடை சீசனில் சுற்றுலா பயணிகளை கவரும் வண்ணம் கோடை விழா மலர் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது.



அந்த வகையில், இந்த ஆண்டுக்கான மலர் கண்காட்சி வருகிற 24ந்தேதி தொடங்கும் என திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அறிவித்துள்ளார். மே 24ம் தேதி தொடங்கும் மலர் கண்காட்சி ஜூன் 1ம் தேதி வரை 9 நாட்கள் நடைபெற உள்ளது.

மலர்கண்காட்சியுடன், கோடை விழாவும் துவங்கி நாய்கள் கண்காட்சி, படகு போட்டி, மீன்பிடித்தல் போட்டி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறும் என திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அறிவித்துள்ளார்.

# பொள்ளாச்சி பாலியல் வழக்கு: பாதிக்கப்பட்ட 2 பெண்கள் இழப்பீட்டு தொகைக்கு விண்ணப்பம்

கோவை, மே.20

பொள்ளாச்சி பாலியல் வழக்கில் கைதான 9 குற்றவாளிகளுக்கு, கோவை மகளிர் கோர்ட்டு கடந்த 13ந்தேதி சாகும்வரை ஆயுள் தண்டனை விதித்து உத்தரவிட்டது. இதையடுத்து தண்டனை விதிக்கப் பட்ட சபரிராஜன், திருநாவுக்கரசு உள்பட 9 பேரும் சேலம் சிறையில் அடைக் கப்பட்டு உள்ளனர். பாதிக் கப்பட்ட பெண்களுக்கு மொத்தம் ரூ.85 லட்சம் இழப்பீடு வழங்க கோர்ட்டு உத்தரவிட்டது.

இந்த நிலையில் இழப்பீட்டு தொகையை பெற, கோவை சட்ட உதவி மையத்தில் பாதிக்கப் பட்ட பெண்கள் விண்ணப்பித்து வருகிறார்கள். இது குறித்து இந்த வழக்கில் ஆஜரான சி.பி.ஐ. வக்கீல் சுரேந்திர மோகன் கூறியதாவது:

இந்த வழக்கில் மொத்தம் 8 பெண்கள் பாதிக்கப் பட்டனர். இதில் 7 பெண்களுக்கு ரூ.85 லட்சத்தை பிரித்து வழங்க மகளிர் கோர்ட்டு உத்தரவிட்டது. இதுவரை 2 பெண்கள் இழப்பீட்டு தொகைக்கு விண்ணப்பித்து உள்ளனர். மேலும் பலர் விரைவில் விண்ணப்பிப் பார்கள். அவர்களுக்கு சட்ட உதவி மையம் மூலம் இழப்



பீட்டு தொகை வழங்கப்படும்.

இதற்கிடையே பாதிக் கப்பட்ட 8 பெண்களுக்கும் தலா ரூ.25 லட்சத்தை நிவாரண தொகையாக வழங்க தமிழக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டு உள்ளார். அந்த தொகையையும் அரசு வழங்கும். இந்த வழக்கில் முதலில் புகார் செய்த மாணவியிடம் குற்றவாளிகள் 2 பவுன் நகையை பறித்து இருந்தனர். அந்த நகை வழக்கு விசாரணைக்காக கோர்ட்டில் ஒப்படைக்கப்பட்டு இருந்தது. அந்த நகை மீட் கப்பட்டு பாதிக்கப்பட்ட மாணவியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

தண்டனை விதிக்கப்பட்ட 9 பேரும், கோடை விடுமுறைக்கு பின்னர் ஐகோர்ட்டில் மேல் முறையீடு செய்ய முடிவு செய்து இருப்பதாக அவர்களது தரப்பு வக்கீல்கள் தெரிவித்தனர்.

# வருகிற சட்டமன்ற தேர்தலில் நாம் தமிழர் கட்சி தனித்து போட்டி: சீமான் அறிவிப்பு

கோவை, மே.20

கோவை கொடிசியாவில் நடைபெற்ற தமிழின எழுச்சி பொதுக்கூட்டத்தில் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் பேசியதாவது:

கடந்த 2016ம் ஆண்டு நாம் 1.1 சதவீதம் ஓட்டுகளை பெற்றோம். தொடர்ந்து படிப்படியாக வளர்ந்து 2024ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 36 லட்சம் ஓட்டுகளை பெற்றுள்ளோம். வருகிற 2026ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் நாம் தமிழர் கட்சி தனித்து களம் காணும். எந்த கட்சியுடனும் கூட்டணி அமைக்க மாட்



டோம்.

கூட்டணி அமைக்காததால் எங்கள் கட்சி தொண்டர்கள் சோர்வு அடைந்து விட மாட்டார்கள். இந்தியாவில் எல்லா இடைத் தேர்தலிலும் புறக்கணிக்காமல் போட்டியிட்ட ஒரே கட்சி நாதக. தோல்வி என்பது தோல்வியல்ல, பயிற்சி. எந்த கட்சியோடும் சேராமல் தனித்து நின்று மாநில அங்கீகாரம் பெற்ற ஒரே கட்சி நாம் தமிழர் கட்சி.

2026ம் ஆண்டு தேர்தலுக்கு விவசாயி சின்னம் மீண்டும் கிடைத்துள்ளது. எனது எண்ணம் மட்டும் இந்த சின்னம் அல்ல. சின்னமே நான் தான். 2026ம் ஆண்டு தேர்தலில் 117 இடங்கள் பெண்களுக்கும், 117 இடங்கள் ஆண்களுக்கும் ஒதுக்கப்படும். இதில் 134 இடங்கள் இளைஞர்களுக்கு கொடுக்கப்படும். இலங்கை இனப்படுகொலை தொடர்பாக பொதுவாக் கெடுப்பு நடத்த வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# கல்பனா சாவ்லா விருதுக்கு விண்ணப்பிக்கலாம் தமிழக அரசு

சென்னை, மே.20

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

சுதந்திர தின விழாவின் போது, துணிவு மற்றும் சாகச செயல் புரிந்த வீரப் பெண்மணிக்கு கல்பனா சாவ்லா விருது தமிழ்நாடு அரசால் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது. வீர தீர செயல் புரிந்த பெண் ஒருவருக்கு ரூ.5 லட்சம் ரொக்கப்பரிசுடன் தங்கமுலாம் பூசப்பட்ட வெள்ளிப் பதக்கம் விருதாளருக்கு வழங்கப் படும்.

இதனைத்தொடர்ந்து 2025ம் ஆண்டு சுதந்திர தின விழாவின்போது, கல்பனா சாவ்லா விருது வழங்கப்படவுள்ளது. இவ்விருதுக்கான விண்ணப்ப விவரங்கள் அனைத்தும் 16ந்தேதி முதல் தமிழக அரசின் விருதுகள் இணையதளத்தில் (https://awards.tn.gov.in)



பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இணையதளத்தில் விண்ணப்பித்தவர்கள் சம்மந்தப்பட்ட மாவட்ட சமூக நல அலுவலகத்தில் நேரில் சென்று ஆவணங்களை ஒப்படைக்க வேண்டும்.

எனவே, அனைத்து மாவட்டங்களிலும், துணிவு மற்றும் சாகச செயல் புரிந்த வீரப் பெண்மணிக்கு கல்பனா சாவ்லா விருது வழங்கிட ஏதுவாக, இணையதளத்தின் மூலம் வருகின்ற ஜூன் 16ந் தேதிக்குள் கருத்துருக்களை சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.

# பா.ஜ.க.வுடன் விஜய் சேர மாட்டார் என நம்புகிறேன் துரை வைகோ பேட்டி

நாகர்கோவில், மே.20

ம.தி.மு.க. முதன்மை செயலாளர் துரை வைகோ நாகர்கோவிலில் நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப் போது அவர் கூறியதாவது:

புதிய கல்விக் கொள்கை தமிழகத்துக்கு முற்றிலும் விரோதமானது. இது இந்தி பேசாத அனைத்து மாநிலங்களுக்கும் எதிரானது. ஆங்கிலம் வேண்டாம் என வடமாநில பா.ஜ.க.வினர் கூறி வருகிறார்கள். ஆனால் இது பற்றி தமிழக பா.ஜ.க.வினர் பேசாதது ஏன்?. தமிழகத்தில் உள்ள



கல்விக் கொள்கை மிக சிறந்தது. இந்தி மொழி திட்டத்தினால் பல வட மாநில மொழிகள் அழிந்துள்ளன.

கன்னியாகுமரியில் 27 ஆயிரம்சதுரகிலோமீட்டர் கடல் பரப்பில் ஹைட்ரோ கார்பன் திட்டம் வருகிறது. இதனால் பொருளாதாரம் அதிகரிக்கும் என கூறுகிறார்கள். ஆனால் என்னென்ன பாதிப்புகள் ஏற்படும் என ஆராய வேண்டும். மக்களிடம் கருத்து கேட்காமல் இந்த ஹைட்ரோ கார்பன் திட்டத்தை கொண்டு வருவது மக்கள் விரோத போக்காகும்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்றவற்றுக்கு ம.தி.மு.க. எப்போதும் குரல் கொடுக்கும். பா.ஜ.க. மதவாத கட்சி என தமிழக வெற்றி கழக தலைவர் விஜய் கூறியுள்ளார். இதனால் அவர் பா.ஜ.க.வுடன் கூட்டணி சேர மாட்டார் என நம்புகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

# திருநள்ளாறில் ஒருமாத பெண் குழந்தை விற்பனை: மேலும் 6 பேர் கைது

காரைக்கால், மே.20

காரைக்கால் திருநள்ளாறில் ஒருமாத பெண் குழந்தையை விற்பனைசெய்தவிவகாரத்தில் தமிழகத்தை சேர்ந்த இடைத்தரகர்கள் உட்பட மேலும் 6 பேரை கைது செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டு வரு



கின்றனர். குழந்தை விற்பனை விவகாரத்தில் ஏற்கனவே 10 பேர் கைது செய்யப்பட்ட நிலையில் மேலும் 6 பேரை கைது செய்தனர். குழந்தை விற்பனையில் சுமார் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் கைமாறியது விசாரணையில் அம்பலமானது.

# மீன்பிடி தடை காலம் எதிரொலி; படகுகள் பழுது நீக்கம், வலைகள் சீரமைப்பில் மீனவர்கள் மும்முரம்

நாகை, மே.20

மீன்பிடி தடைக்காலத்தையொட்டி மீனவர்கள் விசைப்படகுகளை பழுது நீக்குதல் மற்றும் வலைகள் சீரமைப்பு பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறார்கள். தமிழகத்தில் கிழக்கு கடற்கரையில் மீன்களின் இனப் பெருக்க காலத்தை கணக்கில் கொண்டு ஏப்ரல் மாதம் 15ம் தேதி முதல் மீன்பிடி தடைக்காலம் அமலில் உள்ளது. இதனால் விசைப் படகு மீனவர்கள் ஓய்வில் இருந்து வருகின்றனர். 60 நாட்கள் இந்த தடைக் காலம் நீடிக்கும்.

தமிழகத்தில் 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கடலுக்கு செல்லவில்லை. நாகை மாவட்டத்தில் 60க்கும் மேற்பட்ட மீனவ கிராமங்களில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விசைப்படகுகள் பாதுகாப்பாக கரையேற்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தடைகாலத்தை முன்னிட்டு நாகை மீன்பிடி துறைமுகம், கடுவையாறு பகுதிகளில் இன்ஜின்



பழுது நீக்கம், படகு சீரைமத்தல், வலைகள் மற்றும் மீன்பிடி சாதனைங்களை பழுது நீக்கம் செய்தல், படகுகளில் வர்ணம் அடித்தல் போன்ற பணிகள் நடைபெறுகிறது.

இப்பணியில் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் இரவு பகலாக ஈடுபட்டு வருகின்றனர். ஒரு படகினை பழுது நீக்கி மராமத்து பணிகள் மேற்கொள்ள ஒரு வாரத்தில் இருந்து 10 நாட்கள் ஆகும். படகு ஒன்றுக்கு ரூ. 3 லட்சத்தில் இருந்து ரூ. 5 லட்சம் வரை செலவாகும் என்று மீனவர்கள் கூறினர். மீன்பிடி உபகரணங்களை சீரமைக்க ஏற்படும் செலவுகளை ஒன்றிய அரசு மானியத்தில் வங்கி கடனாக வழங்கினால் நன்றாக இருக்கும் என்றும் தெரிவித்தனர்.

தினகனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
20.5.2025

# டாஸ்மாக் மதுக்கடைக்கு சாக்குமூட்டையில் கொண்டு வரப்பட்ட மதுபானங்கள்: அதிகாரிகள் விசாரணை

சேலம் மாவட்டம் கெங்கவல்லி அருகே ஆணையம்பட்டி புதூரில் அரசு டாஸ்மாக் மதுக்கடை உள்ளது. இந்த கடையில் மேற்பார்வையாளராக ராஜேந்திரன், விற்பனையாளராக பெரியசாமி ஆகியோர் வேலை பார்த்து வருகின்றனர்.

இந்த நிலையில் மேற்பார்வையாளர் ராஜேந்திரன் ஒரு சாக்கு மூட்டையில் மதுபான பாட்டிலை எடுத்துக்கொண்டு வந்ததாக கூறப்படுகிறது. அப்போது அந்த பகுதியை சேர்ந்த மதுப்பிரியர்கள் உடனடியாக மேற்பார்வையாளர் ராஜேந்திரனை பிடித்து ஏன் இந்த மதுபாட்டில்களை வெளியில் இருந்து எடுத்து வருகிறீர்கள்? போலி மதுவா? என்று அவரை சுற்றி வளைத்து விசாரித்தனர். இதனால் அந்த பகுதியில் பரபரப்பு நிலவியது.

தகவல் அறிந்ததும் கெங்கவல்லி போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினர். இதனைதொடர்ந்து இந்த சரக்கு பாட்டில் எங்கிருந்து வந்தது? ஏன் இங்கு எடுத்து வந்தார்கள்? என்றுபல்வேறுகோணத்தில் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் இது குறித்து துறைரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

# கல்பனா சாவ்லா விருதுக்கு விண்ணப்பிக்கலாம் தமிழக அரசு

சென்னை, மே.19

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்தி க்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

சுதந்திர தின விழாவின் போது, துணிவு மற்றும் சாகச செயல் புரிந்த வீரப் பெண்மணிக்கு கல்பனா சாவ்லா விருது தமிழ்நாடு அரசால் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது. வீர தீர செயல் புரிந்த பெண் ஒருவருக்கு ரூ.5 லட்சம் ரொக்கப்பரிசுடன்தங்கமுலாம்பூசப்பட்ட வெள்ளிப் பதக்கம் விருதாளருக்கு வழங்கப்படும். இதனைத்தொடர்ந்து 2025ம் ஆண்டு சுதந்திர தின விழா வின்போது, கல்பனா சாவ்லா விருது வழங்கப்படவுள்ளது. இவ்விருதுக்கான விண்ணப்ப விவரங்கள் அனைத்தும் 16 ந்தேதி முதல் தமிழக அரசின் விருதுகள் இணையதளத்தில் (https://awards.tn.gov.in) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இணையதளத்தில் விண்ணப்பித்தவர்கள் சம்மந்தப்பட்ட மாவட்ட சமூக நல அலுவலகத்தில்நேரில்சென்றுஆவணங்க ளை ஒப்படைக்க வேண்டும். னவே, அனைத்து மாவட்டங்களிலும், துணிவு மற்றும் சாகச செயல் புரிந்த வீரப் பெண்மணிக்கு கல்பனா சாவ்லா விருது வழங்கிட ஏதுவாக, இணையதளத்தின் மூலம் வருகின்ற ஜூன் 16ந் தேதிக்குள் கருத்துருக்களை சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நெல்லையில் வழிப்பறி செய்த வாலிபர் குண்டர் சட்டத்தில் கைது

திருநெல்வேலி, மே.20

திருநெல்வேலி, பாளையங்கோட்டை, கொக்கிரகுளத்தைச் சேர்ந்த பாலசுப்பிரம ணியன் மகன் சங்கரநாராயணன் (வயது 23) கடந்த 18.4.2025 அன்று பாளையங் கோட்டை மார்க்கெட்ரோடு, வண்டி பேட்டை அருகே பாளையங்கோட்டை, கோட்டூர்ரோடு, முப்பிடாதி அம்மன் கோவில் மேலத் தெருவில் வசிக்கும் பிச் சையா மகன் அருண்பாபு என்பவரிடமி ருந்து கைப்பேசியை பறித்துச் சென்றுள் ளார்.

இந்த வழக்கில் சம்பந்தப்பட்டு பொது ஒழுங்கு பராமரிப்பிற்கு குந்தகம் விளைவிக்கும் செயல்களில் ஈடுபட்டு வந்த சங்கரநாராயணன், திருநெல்வேலி மாநகர போலீஸ் துணை கமிஷனர் (கிழக்கு) வினோத் சாந்தாராம், போலீஸ்




உதவி கமிஷனர் (பாளையங்கோட்டை சரகம்) சுரேஷ், பாளையங்கோட்டை குற்றப்பிரிவு போலீஸ் இன்ஸ்பெக்டர் பொன்ராஜ் ஆகியோரின் பரிந்துரையின் பேரில், திருநெல்வேலி மாநகர போலீஸ் கமிஷனர் சந்தோஷ் ஹாதி மணி ஆணைப்படிகுண்டர் தடுப்புச் சட் டத்தின்கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் தடுப்புக்காவலில் அடைக்கப் பட்டார்.

# நயினார் நாகேந்திரனை சந்தித்த போலீசார் இருவர் பணியிட மாற்றம்

சென்னை, மே.20

ஆபரேஷன் சிந்தூர் வெற்றிக்காக பிரத மர் மோடி, ராணுவ வீரர்களுக்கு நன்றி தெரிவித்து திருப்பூரில் பா.ஜ.க., சார்பில் தேசிய கொடி ஊர்வலம் நடைபெற்றது. இதில் பா.ஜ.க., மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், முன்னாள் தலைவர் அண் ணாமலை உள்பட நிர்வாகிகள் பலர் பங் கேற்றனர்.

இந்த நிலையில் திருப்பூர் வடக்கு போலீஸ் நிலையத்தில் சட்டம்ஒழுங்கு பிரிவில் பணியாற்றும் போலீஸ்காரர் சின் னச்சாமி, அனுப்பர்பாளையம் போலீஸ் நிலையத்தில் பணியாற்றும் போலீஸ்கா ரர் மந்திரம் ஆகியோர், நயினார் நாகேந்தி ரனை நேரில் சந்தித்து பேசியதாக புகார் எழுந்தது.


இதையடுத்து போலீஸ்காரர்கள் சின்



னச்சாமி, மந்திரம் ஆகிய 2 பேரையும் காவல் கட்டுப்பாட்டு அறைக்கு மாற்றம் செய்து திருப்பூர் மாநகர போலீஸ் கமிஷ னர்ராஜேந்திரன்உத்தரவிட்டார். பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரனை சந்தித்த தாக போலீஸ்காரர்கள் 2 பேர் பணியிட மாற்றம் செய்யப்பட்ட சம்பவம் திருப்பூ ரில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# திருப்பூரில் ஆபரேஷன் சிந்தூர் வாசகத்துடன் டிசர்ட்டுகள் தயாரிப்பு




திருப்பூர், மே.20

இளைஞர்கள், இளம்பெண்கள், சிறுவர்களை கவரும் வகையில் டி சர்ட்டுகளை தயாரிப்பதில் திருப்பூர் முன்னிலைபெற்றுவிளங்கிவருகிறது. குறிப்பாக திருவிழாக்கள், முக்கிய நிகழ்வுகள், சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் நிகழ்வுகள் கொண்ட வாசகங்களுடன் டிசர்ட்டுகள் அச்சிட்டு தயாரித்து சந்தைப்படுத்துவது தொடர்ந்து நடந்து வருகிறது.

உலக கோப்பை கால்பந்து போட்டி, உலக கோப்பை கிரிக்கெட் போட்டி நடக்கும்போது அதுதொடர்பான டி சர்ட்டுகள் திருப்பூரில் தயாராகி அனுப்பி வைக்கப்பட்டது. அதுபோல் இந்தி எதிர்ப்பு வாசகங்களுடன் டிசர்ட்டு, திருக்குறள் டிசர்ட்டுகள் என விதவிதமாக அச்சிட்டு டிசர்ட்டுகள் அந்தந்த காலங்களில் ஆர்டர்களின் பெயரில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்திய ராணுவத்தினர் பாகிஸ்தான் தீவிரவாத முகாம்களை தாக்கி அழித்தனர். ஆபரேஷன் சிந்தூர் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது. இதை நினைவுபடுத்தும் வகையில் ஆபரேஷன் சிந்தூர் வாசகங்களுடன் டி சர்ட்டுகள் வாங்க தமிழகம் மட்டுமில்லாமல் வெளிமாநில இளைஞர்கள் அதிக ஆர்வம் கொண்டுள்ளனர். இதற்கான ஆர்டர்கள் தற்போது திருப்பூர் நோக்கி வரத்தொடங்கியுள்ளன. சர்வதேச அளவிலும் இதுபோன்ற ஆடைகள் தயாரிப்பு ஆர்டர்கள் வந்துள்ளன.

இதுகுறித்து திருப்பூர் பனியன் உற்பத்தியாளர்கள் கூறும்போது, 'ஆபரேஷன் சிந்தூர் திட்டத்தை பாராட்டியும், அதை வரவேற்றும் வாசகங்கள் அடங்கிய டிசர்ட்டுகள் தயாரிக்க ஆர்டர்கள் வருகிறது. இளைஞர்களிடம் வரவேற்பு அதிகம் உள்ளதால் பல்வேறு வண்ணங்களில் விதவிதமான டிசைன்களில் தயாரித்து வருகிறோம். தமிழகம் மட்டுமில்லாமல் வடமாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்து புதிய ஆர்டர்கள் வருகிறது. காலத்துக்கேற்ப பனியன் தயாரிப்புகளை மேற்கொண்டு வருகிறோம்' என்றனர்.

## தினசரி பலன்கள் (20.5.2025)

1. மேஷம்

நன்மை: புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். கவனம்: வாகன ஓட்டத்தில் கவனம் தேவை.

2. ரிஷபம்

நன்மை: குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். கவனம்: செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

3. மிதுனம்

நன்மை: வேலைவாய்ப்பில் வளர்ச்சி. கவனம்: சீரான உணவு பழக்கம் தேவை.

4. கடகம்

நன்மை: புதிய நண்பர்கள் உருவாகலாம். கவனம்: உணர்ச்சிவசப்படாமல் இருங்கள்.

5. சிம்மம்

நன்மை: முக்கிய முடிவுகள் எடுக்கும் நாள். கவனம்: கோபத்தை கட்டுப்படுத்துங்கள்.

6. கன்னி

நன்மை: தொழிலில் முன்னேற்றம். கவனம்: உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

7. துலாம்

நன்மை: மனதுக்கு நிம்மதியான நாள். கவனம்: பழைய நெருக்கடிகள் நினைவுபடுத்தக்கூடும்.

8. விருச்சிகம்

நன்மை: துணிச்சலுடன் செயல்படுவீர்கள். கவனம்: உறவுகளில் தவறான புரிதலை தவிர்க்கவும்.

9. தனுசு

நன்மை: கல்வியில் சாதனை. கவனம்: அவசர முடிவுகளை தவிர்க்கவும்.

10. மகரம்

நன்மை: உழைப்புக்கு நல்ல பலன். கவனம்: உடல் சோர்வை தவிர்க்க ஓய்வெடு க்கவும்.


11. கும்பம்

நன்மை: தொழிலில் புதிய வாய்ப்பு. கவனம்: நிதி துறையில் சிக்கனமாக இருக்கவும்.

12. மீனம்

நன்மை: சிந்தனை தெளிவாக இருக்கும். கவனம்: மன அழுத்தம் ஏற்படாதவாறு செயல்படவும்.

# மார்பகங்கள் இப்படி உணர்ந்தால்...ஈஸ்ட்ரோஜன் ஆதிக்க அறிகுறிகளை சமந்தாவிடம் விளக்கிய பி.சி.ஓ.எஸ் நிபுணர்



உடல் நலம் குறித்த மதிப்புமிக்க தகவல்களை அடிக்கடி தனது சமூக வலைதளம் மூலம் சமந்தா பகிர்ந்து வருகிறார்.

அந்த வகையில், பி.சி.ஓ.எஸ் மற்றும் எண்டோமெட்ரியோசிஸ் சார்ந்த ஊட்டச்சத்து நிபுணராண ராஷி சவுத்ரியுடன் சமீபத்தில் சமந்தா உரையாடல் நடத்தினார். அப்போது நடிகை சமந்தா உடலில் ஈஸ்ட்ரோஜன் ஆதிக்கம் இருக்கிறது என்பதை கண்டுபிடிப்பது எப்படி? என்று கேட்டார்.

அதற்கு ராஷி சவுத்ரி, "மார்பகங்கள் கனமாக உணருவது, முகப்பரு ஏற்படுவது, உடல் எடையை குறைக்க முடியவில்லை என்று நீங்கள் உணரும்போது, தைராய்டு பிரச்சினை போன்றவை இருந்தால் உடலில் ஈஸ்ட்ரோஜன் அதிகமாக இருக்க வாய்ப்பிருக்கிறது ' என்றார்.

இதனால்உடல்நலஅபாயங்கள்ஏற்படுமா?என்பதுகுறித்துமருத்துவர்கள் கூறுகையில், "ஈஸ்ட்ரோஜன் அதிகமாக இருப்பது பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய் வருவதற்காக அபாயத்தை அதிகரிக்கும் " என்கின்றனர்.

மேலும், அதை எப்படி கட்டுக்குள் வைத்திருப்பது? என்பது குறித்து கூறுகையில், வறுத்த உணவுகள், இனிப்புகள், சாக்லேட்டுகள், ஐஸ்கிரீம்கள் மற்றும் கொழுப்புச்சத்தை அதிகரிக்கும் உணவுகளை உட்கொள்வதைத் தவிர்க்க பரிந்துரைக்கின்றனர்.

ஆரோக்கியமான உணவு முறையைப் பின்பற்றுவது, மன அழுத்தத்தை குறைப்பது, உடற்பயிற்சி செய்வது மற்றும் சில உணவுகளை தவிர்ப்பது ஈஸ்ட்ரோஜனை கட்டுக்குள் வைத்திருக்கும் ஒரு பொதுவான வழியாகும்.

# விருது விழாவில் தந்தையுடன் நடனமாடிய பிரபல நடிகை வீடியோ வைரல்



நடிகை அனன்யா பாண்டே ஒரு விருது வழங்கும் விழாவில் தனது தந்தை சங்கி பாண்டேவுடன்நடனமாடிய வீடியோதற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

கடந்த 17 ம் தேதி நடந்த ஒரு விருது வழங்கும் விழாவில் தனது தந்தை சங்கி பாண்டே நடித்த பிரபல பாடலான 'மைன் தேரா தோடா து மேரி மைனா'க்கு அனன்யா நடனமாடினார். இதில் சுவாரசியம்என்னவென்றால்அந்தபாடலுக்குசங்கிபாண்டேவுடன் நடனமாடியதுதான்.

இது அங்கிருந்தவர்களை மகிழ்ச்சியாகவும், ஏக்கமாகவும் உணர வைத்தது. மறக்கமுடியாத இந்த தருணத்தை இன்ஸ்டாகிராம் ஸ்டோரியில் பகிர்ந்து கொண்ட அனன்யா பாண்டே, "அப்பாவின் பாடல்களில் நடனமாடுவது மிகவும் வேடிக்கையானது" என்று பதிவிட்டிருக்கிறார்.

அனன்யாபாண்டேசமீபத்தில்'கேசரி:அத்தியாயம்2'ல்நடித்திருந்தார்.அதனையடுத்து,தர்மாபுரொடக்சன்ஸ் தயாரிக்கும் காதல் படமான 'சந்த் மேரா தில்' படத்தில் லக்ஷசயா லால்வானிக்கு ஜோடியாக நடித்து வருகிறார்.

# 'பூத் பங்களா' படப்பிடிப்பு நிறைவு அக்சய் குமார் பகிர்ந்த வீடியோ வைரல்

அக்ஷய் குமார்நடிப்பில் பிரியதர்ஷன் இயக்கத்தில் உருவாகி வரும் அடுத்த திகில்நகைச்சுவை படமான 'பூத் பங்களா' அறிவிக்கப்பட்டதிலிருந்தேபெரும்எதிர்பார்ப்பைஏற்படுத்தி வருகிறது.



இந்நிலையில், இப்படத்தின் படப்பிடிப்பை முடித்துவிட்டதாக நடிகர் அக்சய் குமார் வீடியோ பகிர்ந்து தெரிவித்துள்ளார். அந்த வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

பாலிவுட் திரையுலகில் முன்னணி நடிகர்களில் ஒருவராக இருப்பவர் அக்சய் குமார். இவர், தமிழில் ரஜினியுடன் 2.0 திரைப்படத்தில் நடித்திருந்தார். சமீபத்தில் இவரின் நடிப்பில் ஓஎம்ஜி 2, 'சர்பிரா', 'கேல் கேல் மெய்ன்' மற்றும் சிங்கம் அகெய்ன் ஆகிய திரைப்படங்கள் வெளியாகின.

தற்போது பாலிவுட் இயக்குனர் பிரியதர்ஷன் இயக்கும் 'பூத் பங்களா' படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார். இதன் மூலம் அக்சய் குமார் 16 வருடங்களுக்கு பிறகு பிரியதர்ஷனுடன் இணைந்துள்ளார். கடைசியாக இருவரும் கடந்த 2007ம் ஆண்டு வெளியான பூல் பூலையா படத்தில் ஒன்றாக பணியாற்றினர்.

மேலும், இப்படத்தில் வாமிகா கபி, தபு உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். இப்படம் அடுத்த ஆண்டு ஏப்ரல் 2ம் தேதி வெளியாக உள்ளது.

# இத்தாலி ஓபன் டென்னிஸ்: கார்லஸ் அல்காரஸ் சாம்பியன்



இத்தாலி ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி ரோமில் நடந்தது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் 'நம்பர் ஒன்' வீரரான ஜானிக் சின்னர் (இத்தாலி), 3ம் நிலை வீரரான கார்லஸ் அல்காரசை (ஸ்பெயின்) எதிர்கொண்டார். 1 மணி 43 நிமிடம் நடந்த இந்த ஆட்டத்தில் அல்காரஸ் 76 (75), 61 என்ற நேர் செட்டில் சின்னரை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். சாம்பியன் பட்டம் வென்ற அல்காரசுக்கு ரூ.9½ கோடி பரிசுத்தொகையாக வழங்கப்பட்டது. 2வது இடம் பிடித்த சின்னருக்கு ரூ.5 கோடி கிட்டியது.

# சாய் சுதர்சன், சுப்மன் கில் அதிரடி... 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் குஜராத் டைட்டன்ஸ் அபார வெற்றி



10 அணிகள் இடையிலான 18வது ஐ.பி.எல். தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் புதுடெல்லியில் உள்ள அருண் ஜெட்லி மைதானத்தில் இன்று நடைபெற்ற 60வது லீக் ஆட்டத்தில் டெல்லி கேப்பிடல்ஸ் குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற குஜராத் அணியின் கேப்டன் சுப்மன் கில் பந்துவீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் பேட்டிங் செய்த டெல்லி அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக பாப் டு பிளெஸ்சிஸ் கே.எல். ராகுல் களமிறங்கினர். இதில்டுபிளெஸ்சிஸ்5ரன்களில்ஆட்டமிழந்துஏமாற்றினார்.இதனையடுத்து கை கோர்த்த அபிஷேக் போரல் கே.எல்.ராகுல் ஜோடி அணியை சரிவிலிருந்து மீட்டது.

சிறிது நேரம் நிதானம் காட்டிய இருவரும் நேரம் செல்ல செல்ல அதிரடியாக விளையாடினர். அணியின் ஸ்கோர் 106 ரன்களாக உயர்ந்தபோது இந்த ஜோடி பிரிந்தது. அபிஷேக் போரல் 30 ரன்களில் ஆட்டமிழந்தார். இதனிடையே கே.எல்.ராகுல் 35 பந்துகளில் அரைசதத்தை கடந்தார். அடுத்து வந்த கேப்டன் அக்சர் படேல் 25 ரன்களில் அவுட்டானார்.

தொடர்ந்து அதிரடி காட்டிய கே.எல். ராகுல் 60 பந்துகளில் சதத்தை நிறைவு செய்தார். அவருக்கு ஒத்துழைப்பு கொடுத்த ஸ்டப்ஸ் தனது பங்குக்கு 21 ரன்கள் அடித்தார். நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் டெல்லி கேப்பிடல்ஸ் அணி 3 விக்கெட்டுகளை இழந்து 199 ரன்கள் எடுத்தது. கே.எல். ராகுல் 112 ரன்களுடன் களத்தில் இருந்தார்.

இதையடுத்து 200 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் குஜராத் டைட்டன்ஸ் அணி களமிறங்கியது. அந்த அணியில் தொடக்க வீரர்களாக சாய் சுதர்சன் மற்றும் கேப்டன் சுப்மன் கில் களமிறங்கினர். தொடக்கம் முதலே இருவரும் அதிரடியாக விளையாடினர்.

19வது ஓவரில் குஜராத் டைட்டன்ஸ் அணி 205 ரன்கள் எடுத்து 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் டெல்லி அணியை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது. சாய் சுதர்சன் 61 பந்துகளில் 108 ரன்களும் (4 சிக்சர்கள், 12 பவுண்டரிகள்) சுப்மன் கில் 53 பந்துகளில் 93 ரன்களும் (7 சிக்சர்கள், 3 பவுண்டரிகள்) எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# டி20 கிரிக்கெட்: 3வது இந்திய வீரராக கே.எல்.ராகுல் மாபெரும் சாதனை



10 அணிகள் இடையிலான 18வது ஐ.பி.எல். சீசன் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் புதுடெல்லியில் உள்ள அருண் ஜெட்லி மைதானத்தில் இன்று நடைபெற்று வரும் 60வது லீக் ஆட்டத்தில் டெல்லி கேப்பிடல்ஸ் குஜராத் டைட்டன்ஸ் அணிகள் விளையாடி வருகின்றன. இதில் டாஸ் வென்ற குஜராத் அணியின் கேப்டன் சுப்மன் கில் பந்துவீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் பேட்டிங் செய்த டெல்லி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்து 199 ரன்கள் அடித்துள்ளது. அதிகபட்சமாக கே.எல். ராகுல் 112 ரன்கள் அடித்தார். இதனையடுத்து 200 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி குஜராத் களமிறங்கி உள்ளது.

இந்த ஆட்டத்தில் கே.எல். ராகுல் அடித்த சதம் டி20 கிரிக்கெட்டில் அவர் அடித்த 7வது சதமாக பதிவானது. இதன் மூலம் டி20 கிரிக்கெட் வரலாற்றில் அதிக சதங்கள் அடித்த 3வது இந்திய வீரர் என்ற மாபெரும் சாதனையை படைத்துள்ளார்.

அந்த பட்டியல்: 1. விராட் கோலி 9 சதங்கள் 2. ரோகித் சர்மா 8 சதங்கள் 3. அபிஷேக் சர்மா/கே.எல்.ராகுல் 7 சதங்கள்

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.